# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.49/2024 நாள் : 29.06.2024**

## பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களில் உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோகத்தின் அளவு மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்காக அடிப்படை கணக்கெடுப்பு பணிகள் (Baseline Survey) 01.07.2024 முதல் தொடக்கம்

<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களில் உள்ள பகுதிகளுக்கு 6 ஏரிகள் மற்றும் 3 கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மூலம் நாளொன்றுக்கு 1072 MLD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் விநியோக அளவு மற்றும் தரத்தினை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு நிதித்துறை மூலமாக சென்னை நகர கூட்டாண்மை திட்டத்தின் கீழ் சென்னைக் குடிநீர் வாரியத்தின் சார்பில் 15 மண்டலங்களில் உள்ள அனைத்து பகுதிகளிலும் 01.07.2024 முதல் 60 நாட்களுக்கு, அடிப்படை கணக்கெடுப்பு பணிகள் (Baseline Survey) மேற்கொள்ளப்படும்.

இக்கணக்கெடுப்பின் அடிப்படையில், சென்னைக் குடிநீர் வாரியத்தின் செயல்பாட்டு திறனை மேம்படுத்துதல், சேவை எல்லையை விரிவாக்குதல், வீட்டு இணைப்புகளை அதிகப்படுத்துதல், தினசரி குடிநீர் வழங்கல் சேவையை மேம்படுத்துதல், நிர்ணியக்கப்பட்ட தரத்தின் அளவுகளின் அடிப்படையில் குடிநீர் விநியோகம் விநியோகிக்க படுகிறதா போன்றவைகள் தொடர்பாக சென்னை பகுதிகளுக்குட்பட்ட வணிக நிறுவனங்கள் மற்றும் வீடுகள்தோறும் கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

எனவே, சென்னை குடிநீர் வாரியத்தால் உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு, அடையாள அட்டையுடன் கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்ளும் களப்பணியாளர்கள், பொதுமக்களிடம் குடிநீரின் தரம் மற்றும் குடிநீர் வழங்கப்படும் அளவு மற்றும் அதன் கால அளவு உள்ளிட்ட பல்வேறு விவரங்களை சேகரிக்கும் பணிகளை மேற்கொள்வார்கள்.

இக்கணக்கெடுப்பு பணிகளுக்கு தேவையான விவரங்களை பொது மக்கள் களப்பணியாளர்களிடம் தெரிவித்து குடிநீர் வாரியத்தின் செயல்பாட்டினை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in